# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 23 செவ்வாய்க்கிழமை 07.01.2025 கதிர் 89



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel



# மேலே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு வீடு செல்ல நான் இங்கு வரவில்லை

## நாடாளுமன்றில் அர்ச்சுனா எம்.பி. ஆவேசம்

**நாடாளுமன்றில் தமக்கு உரையாற்றுவதற்கு நேரம் ஒதுக்குவதில் தொடர்ந்தும் சிக்கல் நிலவுவதாக யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா இன்று சபையில் தெரிவித்தார்.**



சபாநாயகர் இந்த விடயத்தில்தலையிட்டு உடனடியாகத் தீர்த்து வைக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

அவர் நாடாளுமன்றில் உரையாற்றுவதற்கான நேரத்தை ஒதுக்க வேண்டிய பொறுப்பு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் இருக்கும்நிலையில்அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இது தொடர்பாக சபாநாயகரின் அறிவுறுத்தல் கிடைக்கப்பெற்ற போதும், எதிர்க்கட்சித் தலைவர் அதற்கான நடவடிக்கையை எடுக்கவில்லை என அர்ச்சுனா எம்.பி. குற்றம் சுமத்தினார்.

தாம் யாழ்ப்பாணத்திலிருந்து இங்கு வந்து நாடாளுமன்றில் அமர்ந்து மேலே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு வீடு செல்வதற்காக வரவில்லை என்றும், உரையாற்றச் சந்தர்ப்பம் வழங்கப்படாமையால் நாடாளுமன்றம் வந்து பயனற்ற நிலைமை இருப்பதாகவும் அர்ச்சுனா எம்.பி. குறிப்பிட்டார்.

இதன்போது எழுந்த எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் கயந்த கருணாதிலக

7 ➤

# ஈஸ்டர் தாக்குதல் குறித்து இதுவரை 747 பேர் கைது

## சபையில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தகவல்



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்தொடர்பில் இதுவரை 747 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று வாய்மூல

7 ➤

# புதிய 5 இராஜதந்திரிகள் நியமனம்

இலங்கையின் இராஜதந்திர சேவைகளை முன்னெடுக்கும் வகையில் புதிதாக 5 இராஜதந்திரிகள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் நியமிக்கப்பட்டுள்ளனர்.



இவர்களுக்கான உத்தியோகபூர்வ நியமனக் கடிதம் ஜனாதிபதி செயலகத்தில் இன்று ஜனாதிபதியால் வழங்கி

7 ➤

# ஜனவரி மாதத்தின் முதல் ஐந்து நாட்களில் 39,415 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு



2025 ஆம் ஆண்டில் ஜனவரி மாதத்தின் முதல் ஐந்து நாட்களில் 39 ஆயிரத்து 415 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் ரஷ்யாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 6 ஆயிரத்து 481 ஆகும்.

7 ➤

# வடக்கு மக்களின் மனங்களை வென்றெடுக்க வேண்டும் அநுர

## ஆனால் பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்காதீர் என்று ராகுல தேரர் வலியுறுத்து

“வடக்கு மக்களுக்குரிய வரப்பிரதாசங்கள் வழங்கப்பட வேண்டும். ஆனால், பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்கக்கூடாது.” - என்று வனவாசி ராகுல தேரர் தெரிவித்துள்ளார்.



இங்கிரிய பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

7 ➤

# ஆய்வு மற்றும் அபிவிருத்தி வணிகமயப்படுத்தல்: ஜனாதிபதி தலைமையில் தேசிய செயற்றிட்டம்!

கொழும்பு, ஜன. 07

தேசிய ஆய்வு மற்றும் அபிவிருத்தி வணிகமயமாக்கல் செயற்றிட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில் நாளை புதன்கிழமை, ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

உற்பத்தி சார்ந்த பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதிலும் மக்களை மையப்படுத்திய பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதிலும் கவனம் செலுத்தி வரும் அரசாங்கம், உற்பத்தி அடிப்படையிலான பொருளாதார மாதிரியின் முக்கிய

7 ➤



# ரணில் – சஜித் கட்சிகள் இணையும் சாத்தியம் அதிகம்

## ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவிப்பு



ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து செயற்படுவதற்குரிய சாத்தியம் உள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்துள்ளார்.

எவ்வாறு இணைவது என்பது பற்றி ஆராயப்பட்டு வருகின்றது எனவும் அவர் கூறியுள்ளார்.

7 ➤

**- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -**

# மீண்டும் வீதித்தடை சோதனைச் சாவடி





யாழ்ப்பாணம், ஜன 07

யாழ்ப்பாணத்தில் நீண்டகாலமாக இருந்து அகற்றப்பட்ட சோதனைச் சாவடிகள் மீண்டும் திடீரென அமைக்கப்பட்டு வருகின்றமை பொதுமக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

யுத்தத்தின் போதும் யுத்தம் முடிவுற்ற பின்னரும் கூட பல்வேறு இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன. குறித்த சோதனைச் சாவடிகளை அகற்றுமாறு அரசியல் கட்சிகளும் பொதுமக்களும் நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வந்திருந்தனர். இந்த நிலையில் நாட்டில் புதிய ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டு ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்க யாழ்ப்பாணத்திற்கு வந்து சென்ற பின்னர் அங்கு இருந்த சோதனைச் சாவடிகள் அனைத்தும் உடனடியாக அகற்றப்பட்டன. இவ்வாறான நிலையில் திடீரென அகற்றப்பட்ட அந்த சோதனைச் சாவடிகள் தற்போது மீண்டும் அதே இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.

மாற்றம் என்று கூறி புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள அனுர அரசாங்கம் சோதனைச் சாவடிகளை தாமே அகற்றுவதும் மீண்டும் தாமே அமைக்கின்ற இந்த நடவடிக்கை தொடர்பில் பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை பொதுமக்கள் மத்தியில் பல்வேறு சந்தேகத்தையும் பெரும் அச்சத்தையும் ஏற்படுத்தி உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கோப் குழுவுக்கு புதிய உறுப்பினர்கள் நியமனம்

கொழும்பு, ஜன 07

இலங்கையின் 10வது பாராளுமன்றத்தின் பொது நிதி தொடர்பான குழுவிற்கு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களான சத்துரங்க அபேசிங்க, சாணக்கியன் ராசமாணிக்கம், கௌசல்யா ஆரியரத்ன மற்றும் ஆர்கம் இல்யாஸ் ஆகியோர் புதிய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

2025 ஆம் ஆண்டுக்கான முதலாவது பாராளுமன்ற அமர்வு ஆரம்பமான வேளையில் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

பொது நிதி தொடர்பான குழுவின் தலைவராக ஐக்கிய மக்கள் சக்தியின பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா முன்னதாக நியமிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மக்களுக்கு மகிழ்ச்சியான அறிவிப்பு

கொழும்பு, ஜன 07

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் தங்கியுள்ள மக்களுக்கு மகிழ்ச்சியான அறிவிப்பை அரசாங்கம்வெளியிட்டுள்ளது.

இதன்படி புலம்பெயர்ந்தவர்கள் தாம் வாழும் நாடுகளில் உள்ள ஸ்ரீ லங்கா தூதரகங்களில் தமக்குரிய பிறப்புச் சான்றிதழ், திருமணச் சான்றிதழ் மற்றும் இறப்புச் சான்றிதழ்களை தாமதமின்றி பெற்றுக்கொள்ள முடியும்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் டிஜிட்டல் மயமாக்கல் நிகழ்ச்சி நிரலின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டத்திற்கு அமைய இந்த திட்டம் திங்கட்கிழமை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்படி, 07 தூதரகங்களுக்கு இந்த முன்னோடித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன், ஜப்பான், கட்டார், குவைத் தூதரகங்கள், மிலானோ, டொறொன்டோ, மெல்பேர்ன் மற்றும் துபாய் ஆகிய நாடுகளின் துணைத் தூதரகங்கள் ஊடாக அந்த நாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கு மேற்படி ஆவணங்களை தாமதமின்றி பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

எதிர்வரும் காலங்களில் அனைத்து தூதரகங்களையும் உள்ளடக்கிய வகையில் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.(ஐ)

## அரச வாகனங்களை ஏலத்தில் விட நடவடிக்கை



கொழும்பு, ஜன 07

ஏ8 மாதிரிகள் உட்பட அதிக திறன் கொண்ட எஞ்சினுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட சொகுசு வாகனங்களை ஏலம் விடவும், மார்ச் 01, 2025 க்கு முன்னர் அதில் பெறப்பட்ட வருமானம் குறித்த அறிக்கையை நிதி அமைச்சகத்திற்கு வழங்கவும் அரசாங்கம் அரச நிறுவனங்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவினால் அனைத்து அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கும் விசேட சுற்றறிக்கையின் ஊடாக இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சுற்றறிக்கையின்படி, சுங்கச் சட்டத்தின் HS 87.03 பிரிவின் கீழ் வரும் வாகனங்கள், அதாவது 1800ஊஊ க்கும் அதிகமான திறன் கொண்ட பெட்ரோல் வாகனங்கள் மற்றும் 2300 CC க்கும் அதிகமான திறன் கொண்ட டீசல் வாகனங்கள், அதாவது இரட்டை கார், தனி கார் , வேன்கள், பஸ், லொரி, மற்றும் டிப்பர்கள் ஏலம் விடப்பட உள்ளன.

ஏலம் விடப்படவுள்ள வாகனங்கள் எதனையும் அரச நிறுவனங்கள் கையகப்படுத்துவதற்கு நிதி அமைச்சு தடை விதித்துள்ளது.

அனைத்து அரச வாகனங்களும் கண்காணிக்கப்படுவதையும், அரச நிறுவனத்திற்கு குறைந்த செலவை ஏற்படுத்தும் வகையிலும், அதன் துஷ்பிரயோகத்தை தடுக்கும் வகையில் பயன்படுத்தப்படுவதையும் உறுதி செய்வது அனைத்து அரச நிறுவன தலைவர்களின் பொறுப்பாகும் என சுற்றறிக்கை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

## இலங்கை அகதிகளின் திடீர் முடிவு



யாழ்ப்பாணம், ஜன 07

இலங்கையில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடி காரணமாக கடல் மார்க்கமாக தமிழகத்தில் தஞ்சம் அடைந்த இலங்கைத் தமிழர்கள், தங்களைமீண்டும்நாட்டிற்கு திருப்பி அனுப்பிவைக்குமாறு கோரி இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளரிடம் மனுவொன்றைக்கையளிததுள்ளனர்.

பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கைத் தமிழர்கள்கடந்த 2022 ஆம்ஆண்டு மார்ச் மாதம் 20ஆம் திகதி முதல் இலங்கையிலிருந்து படகு வழியாக சட்ட விரோதமான முறையில் தனுஷ்கோடியில் தஞ்சம் அடையத் தொடங்கினர்.

இதுவரை 309 இலங்கைத் தமிழர்கள் தனுஷ்கோடியில் கடல் வழியாக ஏதிலிகளாக தஞ்சமடைந்துமண்டபம்ஈழத்தமிழர் மறுவாழ்வு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதில் பொருளாதார நெருக்கடி காரணமாகத் தஞ்சமடைந்த இலங்கைத் தமிழர்களை ஏதிலிகளாக இந்திய அரசாங்கம் இதுவரை பதிவு செய்யாத காரணத்தினால் அவர்களுக்கான எந்த விதமான நிவாரணங்களும் கிடைக்கப் பெறுவதில்லை.

இந்தநிலையில் வருமானமின்றி தவிக்கும் ஐந்து குடும்பங்களைச் சேர்ந்த இலங்கை தமிழர்கள் மீண்டும் சட்டவிரோதமாகக் கடல் வழியாக அண்மையில் இலங்கைக்குத்திரும்பி வந்துள்ளதாகத் தமிழக செய்திகள் தெரிவிக்கின் றன.

ஏதிலிகளாகபதிவுசெய்யாமல் உள்ள 13 குடும்பத்தினரை சேர்ந்த தங்களைப்படகுமூலம் அல்லது விமானம் மூலம் மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பி வைக்குமாறு கோரி நேற்றைய தினம் மாவட்ட ஆட்சியாளரை சந்தித்துப் பாதிக்கப்பட்ட இலங்கை ஏதிலிகள் மனுவொன்றைக் கையளித்துள்ளனர். (ஐ)

# நான்கு விமானங்கள் திருப்பிவிடப்பட்டன!



கொழும்பு, ஜன 07

கட்டுநாயக்க விமான நிலையத்தை சுற்றியுள்ள பகுதிகளில் செவ்வாய்க்கிழமை தரையிறங்க வந்த 04 விமானங்கள், அடர்ந்த கடும் பனிமூட்டம் காரணமாக கட்டுநாயக்க விமான நிலைய ஓடுபாதையை சரியாக பார்க்க முடியாததால் மத்தள மற்றும் திருவனந்தபுரம் விமான நிலையங்களுக்கு விமானங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

அதன்படி, துபாயிலிருந்து ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் UL-226 காலை 05.00 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்க, சீனாவின் Guangzhou இல் இருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் UL-881 மற்றும் இந்தியாவின் பெங்களூரில் இருந்து 05.05 க்கு வந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ். UL-174 ரக 03 விமானங்களை மத்தள விமான நிலையத்திற்கு திருப்பிவிடப்பட்டன.

மேலும், துருக்கியின் இஸ்தான்புல்லில் இருந்து காலை 06.00 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த துருக்கிய ஏர்லைன்ஸ் விமானம் TK-730, இந்தியாவின் திருவனந்தபுரம் விமான நிலையத்திற்கு திருப்பி விடப்பட்டது.

மத்தள விமான நிலையத்திற்கு அனுப்பப்பட்ட இலங்கை விமானங்களுக்கு எரிபொருள் வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த விமானங்களில் இருந்த பயணிகள் இறக்கிவிடப்படவில்லை.

வேறு விமான நிலையங்களுக்கு திருப்பி விடப்பட்ட அனைத்து விமானங்களும் காலை 09:00 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு திரும்பின.

அத்துடன், கட்டுநாயக்க விமான நிலையத்தைச் சூழவுள்ள பிரதேசத்தில் நிலவிய அடர்ந்த பனிமூட்டம் காலை 07.00 மணியளவில் படிப்படியாக மறைந்ததையடுத்து, கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த அனைத்து விமானங்களும், திரும்பிச் செல்லாமல், கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்க நடவடிக்கை எடுக்கப்பட்டன. (ஐ)

# மோசடிகள் இருப்பதை ஒப்புக்கொள்கிறேன்



கொழும்பு, ஜன 07

நாட்டில் பதிவு செய்யப்படாத வைத்தியர்கள் சட்டவிரோதமாக மருத்துவப் பயிற்சியில் ஈடுபடுவதை ஒப்புக்கொண்ட சுகாதார அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ, அவர்களுக்கு எதிராக அரசாங்கம் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சில மருத்துவப் பயிற்சியாளர்கள் தாங்கள் பதிவு செய்துள்ள மருத்துவ முறைக்குப் புறம்பாக மருத்துவ முறைகளை நடைமுறைப்படுத்த முனைகின்றனர் என்று அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ரோஹன பண்டாரவின் கேள்விக்கு பதிலளித்த அவர், நாட்டில் பல மருத்துவ முறைமைகள் இயங்கி வருவதாகவும், வைத்திய நிபுணர்கள் உரிய மருத்துவ சபைகளில் பதிவு செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

“சில மருத்துவ சபைகளில் சிக்கல்கள் உள்ளன. சில மருத்துவப் பயிற்சியாளர்கள் தாங்கள் பதிவு செய்த மருத்துவ முறைகளுக்குப் புறம்பாக மருத்துவ முறைகளைப் பயன்படுத்துவதாகக் கூறப்படுகிறது. நாட்டில் இதில் சுமார் 40,000 மோசடி செய்பவர்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இவ்வளவு பேர் இருப்பதாக நான் நினைக்கவில்லை. ஆனால் சில மோசடிகள் இருப்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்,” என்று அவர் கூறினார்.

இதுபோன்ற பதிவு செய்யப்படாத பயிற்சியாளர்கள் மீது சுகாதார மருத்துவ அதிகாரிகளால் சோதனைகள் நடத்தப்பட்டு வருவதாகவும், சில நபர்கள் மீது ஏற்கனவே சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

சம்பந்தப்பட்ட மருத்துவ சபைகளில் தங்களை பதிவு செய்யாமல் பயிற்சி செய்யும் நபர்கள் குறித்து தெரிவிக்குமாறு அவர் மக்களை கேட்டுக் கொண்டார். (ஐ)

# 30,000 ஆசிரியர் வெற்றிடங்கள்



கொழும்பு, ஜன 07

நாடளாவிய ரீதியில் 30,000 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் உள்ளிட்ட அனைத்து பாடங்களுக்கும் ஆசிரியர் வெற்றிடங்கள் இருப்பதாக அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ தெரிவித்துள்ளார்.

புதிய ஆசிரியர்கள் பணியமர்த்தப்படும் வரை காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு



கொழும்பு, ஜன 07

கல்கிசை - வட்டரப்பல வீதியில் இன்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2ஆக அதிகரித்துள்ளது.

இதில் 36 மற்றும் 20 வயதுடைய இருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் வீட்டில் இருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு துப்பாக்கிதாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார், மற்றவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

தாக்குதலுக்கான காரணம் தெரியவராத நிலையில், குறித்த சம்பவம் தொடர்பில் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஐ)

# காத்தான்குடியில் 97 பேர் கைது





*கொழும்பு, ஜன 07*

*குற்றச்செயல்களுடன் தொடர்புபட்ட 97 பேர் காத்தான்குடி பொலிஸார் நடத்திய திடீர் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளின் போது கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர் மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் வழிகாட்டலில் காத்தான்குடி பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது கேரள கஞ்சா மற்றும் ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த 10 நபர்கள், கசிப்பு போதை பொருள் விற்பனை மற்றும் தயாரிப்பில் ஈடுபட்ட 60 நபர்கள், வேகமாக வாகனம் ஓட்டியமை உட்பட வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்ட 27 பேருமாக 97 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்*

*கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து ஐஸ், கேரள கஞ்சா, கசிப்பு என்பன மீட்கப்பட்டுள்ளதுடன் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.*

*(ஐ)*

# தேசிய விளையாட்டு போட்டிகளுக்கு தயாராகும் ஹாக்கி வீராங்கனையை வன்கொடுமை செய்த பயிற்சியாளர்!

உத்தரகாண்டில் நடைபெற உள்ள 38-வது தேசிய விளையாட்டுப் போட்டிக்கு தயாராகி வந்த இளம் ஹாக்கி வீராங்கனை அவரது பயிற்சியாளரால் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டுள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உத்தரகாண்டில் தேசிய விளையாட்டுப் போட்டிகள் 2025 ஜனவரி 28 முதல் பிப்ரவரி 14 வரை நடைபெறும் என்று இந்திய ஒலிம்பிக் சங்கம் கடந்த திங்களன்று அறிவித்தது.

இந்நிலையில் தனது பயிற்சியாளர் பானு அகர்வால் தன்னை பாலியல் வன்கொடுமை செய்ததாக அவரிடம் பயிற்சி பெற்று வந்த சிறுமி ஒருவர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததன் பேரில், அகர்வாலை கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை ஹரித்துவார் பொலிஸார் கைது செய்தனர். அத்துடன் அவரின் பயிற்சி சான்றிதழும் இரத்து செய்யப்பட்டுள்ளது.



கடந்த ஒரு மாதமாக ஹரித்வாரில் உள்ள ரோஷ்னாபாத் பகுதியில் ஹாக்கி தேர்வு முகாமுக்கு மூன்று பயிற்சியாளர்களுடன் சுமார் 30 சிறுமிகள் ஒரு தனியார் சொகுசு விடுதியில் தங்கியிருந்து பயிற்சி பெற்று வந்தனர்.

முகாமின் இறுதி நாளான கடந்த ஞாயிற்றுக்கிழமை பயிற்சியாளர் பாதிக்கப்பட்ட வீராங்கனையை தனது அறைக்கு அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். இந்நிலையில் குறித்த சம்பவத்தை சிறுமி பெற்றோரிடம் கூறியதை அடுத்து அவர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்தனர்.

இதனைத்தொடர்ந்து சிறுமியின் உடல்நிலை ஆரம்பத்தில் நன்றாக இல்லை என அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மருத்துவ பரிசோதனையும் செய்யப்பட்டது.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகள் நடந்து வருகின்றன என்று பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆழ்துளை கிணற்றில் விழுந்த இளம்பெண்:

## மீட்கும் பணிகள் தீவிரம்!



குஜராத் மாநிலம் கட்ச் மாவட்டத்தில் உள்ள கண்டேராய் கிராமத்தில் 18 வயது இளம்பெண் நேற்று காலை ஆழ்துளை கிணற்றில் விழுந்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இந்நிலையில் 540 அடி ஆழமுள்ள ஆழ்துளை கிணற்றில் 490 அடி ஆழத்தில் இளம்பெண் சிக்கி உள்ளதாக புஜ் துணை ஆட்சியர் ஏபி ஜாதவ் தெரிவித்தார்.

ஆரம்பத்தில் இளம்பெண் ஆழ்துளைக் கிணற்றில் விழுந்தது குறித்து அதிகாரிகள் சந்தேகம் கொண்டிருந்தனர். பின்னர் கேமராவின் உதவியுடன் கிணற்றுக்குள் பெண் இருப்பதை உறுதி செய்ததையடுத்து உள்ளூர் மீட்புக் குழு பெண்ணை மீட்பதற்கு தொடர்ந்து போராடி வருகின்றனர். இதன்படி சிக்கியுள்ள பெண்ணை மீட்க தேசிய பேரிடர் மீட்புப் படை மற்றும் எல்லைப் பாதுகாப்புப் படை குழுக்களும் அழைக்கப்பட்டுள்ளதாக துணை ஆட்சியர் தெரிவித்தார்.

தற்போது குறித்த பெண் மயக்க நிலையில் இருப்பதாகவும் அவருக்கு தேவையான ஒக்சிசன் வழங்கப்பட்டு வருவதாகவும் உள்ளூர் மீட்புக்குழு தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# ஐதராபாத்தில் மன்மோகன் சிங் பெயரில் பிரமாண்ட பாலம் திறப்பு!

தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தில் ரூ.799.74 கோடி செலவில் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் பெயரில் பிரமாண்ட மேம்பாலம் ஒன்று நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த மேம்பாலம் நேரு உயிரியல் பூங்காவில் இருந்து அரம்கர் பகுதி வரை சுமார் 4.04 கிலோ மீட்டர் தூரம் 6 வழிச்சாலையாக அமைக்கப்பட்டுள்ளது.

இது ஐதராபாத்தில் 2-வது பெரிய மேம்பாலமாக இது திகழ்கிறது. இந்த மேம்பாலத்தின் திறப்பு விழா நேற்று நடந்து முடிந்த நிலையில் முதல்-மந்திரி ரேவந்த் ரெட்டி இதனை திறந்து வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# மாரடைப்பால் உயிரிழந்த மூன்றாம் வகுப்பு மாணவி!



சாம்ராஜ்நகரில் உள்ள செயிண்ட் பிரான்சிஸ் பாடசாலையில் 3-ம் வகுப்பு கல்வி கற்று வந்த மாணவி நேற்று காலை திடீரென மாரடைப்பால் உயிழந்துள்ளார்.

கர்நாடக மாநிலம் சாம்ராஜ்நகர் மாவட்டம் பதனகுப்பே கிராமத்தை சேர்ந்தவர் லிங்கராஜ்/. இவரது மனைவி ஸ்ருதி. இந்த தம்பதியின் ஒரே மகள் தேஜஸ்வினி (வயது 6).

இந்த நிலையில் நேற்று காலை சிறுமி தேஜஸ்வினி வழக்கம் போல பாடசாலைக்கு சென்றுள்ளார். 2 வகுப்புகள் முடிந்த நிலையில், வீட்டு பாட நோட்டை ஆசிரியரிடம் காண பிக்க தேஜஸ்வினி வெளியே வந்துள்ளார். அப்போது திடீரென்று அவள் மயக்கம் போட்டு கீழே விழுந்ததாகவும் இதனால் சக மாணவர்களும், ஆசிரியர்களும் அதிர்ச்சி அடைந்து தேஜஸ்வினியை தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும் தெரிவித்தனர் .

அங்கு குறித்த சிறுமியை பரிசோதித்த மருத்துவர்கள் தேஜஸ்வினி மாரடைப்பால் இறந்துவிட்டதாக தெரிவித்தனர்.

மாணவியின் மரணம் தொடர்பாக இதுவரையில் எந்த காரணமும் வெளிவராத நிலையில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# டெல்லி சட்டசபை தேர்தல்: இன்று பிற்பகல் திகதி அறிவிப்பு!

டெல்லி சட்டசபைதேர்தலுக்கான தேர்தல்தேதி இன்று பிற்பகல் 2 மணிக்கு அறிவிக்கப்படும்என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

டெல்லியில் தற்போது ஆம் ஆத்மி கட்சி ஆட்சி நடந்து கொண்டிருக்கும் நிலையில் அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால், முதல்வர் பதவியை இராஜினாமா செய்த நிலையில், அதிஷி தற்போது முதல்வராக உள்ளார்.

இதையடுத்து வரும் பெப்ரவரி மாதத்துடன் ஆம் ஆத்மி ஆட்சிக் காலம் முடிவடைய இருக்கிறது. அதற்கு முன்பே தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதால், தேர்தல் நடத்துவதற்கான பணிகளில் தேர்தல் ஆணையம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.



தேர்தல் திகதி அறிவிப்பு முன்னதாக ஆம் ஆத்மி கட்சி தேர்தல் பணிகளை ஆரம்பித்த நிலையில் , 70 தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை அறிவித்து, கவர்ச்சிகரமான திட்டங்களையும் வெளியிட்டுள்ளது. காங்கிரஸ் கட்சியும் இரண்டு கட்ட வேட்பாளர் பட்டியலையும், பாஜக 29 பேர் கொண்ட முதற்கட்ட வேட்பாளர்கள் பட்டியலையும் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சூப்பர் மம்!



## அம்மாக்காளின் ஆரோக்கியம் பற்றி ஒரு பார்வை

நீங்கள் ஒரு தாயானவுடன் உங்கள் முன்னுரிமைகள் திடீரென்று வியத்தகு முறையில் மாறுகின்றன. நீங்கள் ஒரு காலத்தில் ஆர்வமாக இருந்த விஷயங்களை அதன் பின்னர் செய்ய மாட்டீர்கள். உங்கள் சமூக சூழல் மாறிவிடும்..உங்கள் தினசரி வழக்கம், உங்கள் பழக்கவழக்கங்கள் மற்றும் உங்கள் வாழ்க்கை அனைத்தும் முக்கியமான மாற்றங்களுக்கு உட்பட்டுவிடும் அஆனால் நீங்கள் உங்களை இழக்கக்கூடாது. எல்லா மாற்றங்களிலும் உங்களையும் உங்கள் ஆரோக்கியத்தையும் இழப்பது எளிது.

நீங்கள் கவனிக்க வேண்டிய மிக முக்கியமான விஷயங்களில் ஒன்று உங்களை கவனித்துக் கொள்வது. உங்கள் உடல்நலம், மற்றும் உள நலத்தை கவனித்துக்கொள்வது, உங்கள் குடும்பத்தை கவனித துக்கொள்வதற்கு மிகவும் முக்கியமானது. நீங்கள் நன்றாக இல்லை என்றால், அவர்களும் நன்றாக இருக்க மாட்டார்கள்.

புதிதாகப் பிறந்த குழந்தையைப் பராமரிப்பதில் எப்போதும் மும்முரமாக இருந்தாலும், அம்மாக்கள் தங்களையும் கவனித்துக் கொள்ள வேண்டும்.

ஒரு பொழுதுபோக்கில் ஈடுபடுவது, குழந்தை தொடர்பான பணிகளில் இருந்து விடுபடவும், மேலும் நிறைவாக உணரவும் உதவும். பின்னல், ஓவியம் அல்லது இசை வாசிப்பது எதுவாக இருந்தாலும், நீங்கள் ரசிக்கும் ஏதாவது ஒன்றைச் செய்ய நேரம் ஒதுக்குங்கள். தியானம் அல்லது யோகா போன்றவை மன அழுத்தத்தைக் குறைக்க உதவியாக இருக்கும்.

உங்கள் குழந்தை பிறக்கும் போது நீங்களும் குழந்தையின் தந்தையும் தான் அந்தக் குழந்தையின் உலகம், அந்தக் குழந்தைக்கு வேறு யாரையும் விட நீங்கள் முக்கியம் என்பதால் உங்கள் கவனிப்பு மிகவும் முக்கியமானது. உங்கள் குழந்தையால் நீங்கள் இல்லாமல் சாப்பிடவோ, குளிக்கவோ அல்லது உடல் வெப்பநிலையை பராமரிக்கவோ முடியாது.

நீங்கள் தாய்ப்பால் கொடுத்தால், அப்பா உங்கள் குழந்தையைப் பார்க்காமல் நாள் முழுவதும் செல்லலாம், ஆனால் உங்களால் முடியாது. அதனால்தான் உங்களுக்காக நேரத்தை முதலீடு செய்வதற்கான வாய்ப்பைப் பயன்படுத்துவது முக்கியம். உங்கள் குழந்தை தூங்கும் போது நீங்கள் 20 நிமிடங்கள் குளித்தாலும் போதும். நல்ல உணவு மற்றும் ஓய்வு முக்கியம், ஏனெனில் இது உங்கள் தாய்ப்பாலின் தரத்தை மேம்படுத்துகிறது. உணர்ச்சி சமநிலையை பராமரிப்பது முக்கியம்.

இரத்த சோகை அல்லது விற்றமின் குறைபாடுகள் போன்ற உடல்நலப் பிரச்சினைகளைத் தவிர்க்க உங்களை நீங்களே கவனித்துக் கொள்வது அவசியம். மகப்பேற்றுக்கு பிறகான மனச்சோர்வு போன்ற உளவியல் ரீதியான மற்றும் உடல்நலப் பிரச்சினைகளைத் தவிர்க்க நீங்கள் இதைச் செய்ய வேண்டும்.

அவர்கள் குழந்தைகளாக இருக்கும்போது மட்டுமல்ல, எப்போதும் உங்களை கவனித்துக் கொள்ளுங்கள்

உங்கள் குழந்தை பிறந்தது முதல் நீங்கள் எப்போதும் தாயாக இருப்பது போல், நீங்கள் ஒரு பெண் என்பதை எப்போதும் மறவாதீர்கள்.

இன்று பல தாய்மார்கள் மனச்சோர்வு மற்றும் மனஅழுத்தத்தினால் பாதிக்கப்படுகிறார்கள். நாம் தாய்மார்கள், இல்லத்தரசிகள், வேலையாட்கள், அதே சமயம் எல்லாவற்றிலும் சரியானவர்களாக இருக்க விரும்புகிறோம்.

இதை அனுபவிக்காமல் இருக்க உங்கள் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை நீங்கள் கவனித்துக் கொள்ள வேண்டும். யோகா போன்ற தளர்வு நிலைக்கு உங்களைக் கொண்டுவரும் பயிற்சிகளைப் செய்ய வேண்டும்.உங்கள் குழந்தைகளுடன் இதைப் பயிற்சி செய்வது மிகவும் பயனுள்ளதாக இருக்கும், மேலும் அவர்கள் மிக வும் நிதானமாக இருப்பார்கள்.

ஒரு சிறந்த அம்மாவாக உங்கள் ஆரோக்கியத்தை கவனித்துக்கொள்வதற்கான பிற வழிகள் பல இருக்கின்றன.

நல்ல ஊட்டச்சத்து மற்றும் உடற்பயிற்சியை விட, உங்கள் உள நலத்தைக் கவனித்துக்கொள்வதும் முக்கியம். சில நேரங்களில், ஒரு தாயாக இருப்பதில் மோசமான விஷயம் என்னவென்றால், நீங்கள் விரும்பும் விஷயங்களைச் செய்வதை நீங்கள் நிறுத்த வேண்டும். இந்த விஷயத்தில் நாம் கொடுக்கக்கூடிய சிறந்த அறிவுரை அதைச் செய்யக்கூடாது. நண்பர்களுடன் பழகவும், புத்தகங்களைப் படிக்கவும், இசையைக் கேட்கவும், பொதுவாக எல்லாவற்றையும் அனுபவிக்கவும்.

உங்களுக்கு குழந்தை பிறந்த பிறகு சில செயல்களை நீங்கள் இடைநிறுத்த வேண்டியிருக்கலாம், ஆனால் ஒரு தாயாக நீங்கள் செய்ய விரும்பும் விஷயங்களைச் செய்வதை ஒருபோதும் நிறுத்த வேண்டாம். உங்கள் பிள்ளைகள் அதைப் பாராட்டுவார்கள், ஏனென்றால் நீங்கள் ஒவ்வொரு குழந்தைக்கும் தகுதியான தாயாக இருப்பீர்கள்.

சில சமயங்களில் நமது தொழில், பொழுதுபோக்கை விட்டுக்கொடுத்து, அவர்களுக்குச் சிறந்ததைச் செய்கிறோம் என்று நினைக்கிறோம். அதை ஒரு கணம் ஒதுக்கி வைப்போம். ஆனால் உண்மை என்னவென்றால், அவர்களுக்குத் தேவையானது நாங்கள்தான்.

குழந்தைகளுக்கு சோகமான மற்றும் மனச்சோர்வடைந்த தாய் தேவையில்லை. அவர் பழியை உணர்ந்து விரக்தியடைந்த பெரியவராக மாறுவார், ஏனென்றால் அவர் தனது தாயை ஒருபோதும் திருப்திப்படுத்த முடியாது.

ஒரு குழந்தைக்கு அவருடன் மகிழ்ச்சியாக இருக்கும் தாய் தேவை. ஒரு தாய் வீட்டில் தனியாக இருப்பது மகிழ்ச்சியாக இல்லாவிட்டாலும், தன்னைப் பற்றி நன்றாக உணர ஒரு வழியைத் தேடுகிறாள். இந்த தாய் தன் குழந்தையின் முன்னேற்றத்திற்கு ஒரு உதாரணம். அவள் தன்னைக் கவனித்துக்கொள்கிறாள், தன்னைப் புறக்கணிக்க மாட்டாள், அவள் தன் அம்மாவைப் போலவே ஒரு முழுமையான, பாதுகாப்பான, சுதந்திரமான மற்றும் மகிழ்ச்சியான நபருக்கு முன்மாதிரியாக அமைகிறாள்.

புதிதாகப் பிறந்த குழந்தையைப் பராமரிப்பது அம்மாகளுக்கு ஒரு பெரிய பொறுப்பு, ஆனால் அவர்களும் தங்களைக் கவனித்துக்கொள்வது முக்கியம். அம்மாக்கள் அவர்கள் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்,

அதனால் அவர்கள் தங்கள் குழந்தைகளை நன்றாக கவனித்துக் கொள்ள முடியும். புதிதாகப் பிறந்த தாய்மார்கள் தங்களைக் கவனித்துக் கொள்ள சில குறிப்புகள் இங்கே.

### ஓய்வு அவசியம்:

புதிதாக பிறந்த குழந்தைகளில் பெரும்பாலோனார் இரவு நேரத்தில் அதிகம் தூங்க மாட்டார்கள். இதனால் அம்மாக்களும் முழித்திருக்க வேண்டியிருக்கும். இது மனதளவில் உங்களை எரிச்சல் அடைய செய்யும். எனவே முடிந்தவரை அம்மாக்கள் ஓய்வெடுக்க வேண்டும். குழந்தைகள் தூங்கும் போது அம்மாக்களும் ஓய்வு எடுக்க வேண்டும்.

ஒருவேளை அந்த நேரத்தில் உங்களுக்கு தூக்கம் வரவில்லையென்றால் புத்தகம் படிக்கலாம். பிடித்த விஷயங்களில் நேரத்தை செலவிடுவது உங்களை

மனதளவில் அமைதியாக வைத்திருக்கும். உங்களுக்கு தூக்கம் அதிமாக இருக்கும் நேரத்தில் உங்களது கணவர் அல்லது குடும்ப உறுப்பினர்களிடம் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள சொல்லவும்.

### சுவாச பயிற்சி:

புதிதாக தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை எடுத்துச் செல்லும்போது அவர்கள் மிகவும் பயப்படுவார்கள். ஏதாவது நடக்கலாம் என்று கவலைப்படுகிறார்கள். ஒரு புதிய அம்மாவாக இருப்பது மிகவும் மன அழுத்தத்தை ஏற்படுத்தும் மற்றும் போதுமான தூக்கம் இல்லாததால் அதை இன்னும் மோசமாக்கலாம். ஆனால் அம்மாக்கள் நன்றாக உணர உதவும் வழிகள் உள்ளன, அமைதி மற்றும் குறைவான கவலையை உணர சுவாசப் பயிற்சிகள் போன்றவை.

### நீரேற்றத்துடன் இருத்தல்:

குழந்தைகளைப் பராமரிக்கும் தாய்மார்கள் தங்களைப் பாதுகாப்பதற்கு மறந்து விடுவார்கள். ஆரோக்கியமாகவும், ஆற்றலுடன் இருக்க வேண்டும் என்றால், அதிகளவு தண்ணீர் குடிப்பது அவசியம். ஒரு நாளைக்கு குறைந்தது 3 லீற்றராவது தண்ணீர் குடிக்க வேண்டும்.

### சத்தான உணவுகளை உட்கொள்ளல்:

கர்ப்ப காலத்தில் சாதாரணமாக எந்த உணவையும் சாப்பிடக்கூடாது. அதே சமயம் குழந்தை பிறந்த பிறகு எதை வேண்டுமானாலும் சாப்பிட வேண்டும் என்ற ஆசை வரும். ஆரோக்கியமான உணவுகளை உண்ணுங்கள், இது உங்கள் ஆரோக்கியத்திற்கு மிகவும் உதவும் . பழங்கள் மற்றும் சிறு தானியங்களை சேர்த்துக் கொள்வதும் நல்லது. இது தாய்ப்பால் கொடுக்கும் சோர்வை போக்கக்கூடியது.

### பொழுதுபோக்கிற்காக நேரத்தை ஒதுக்குதல்:

ஒரு பொழுதுபோக்கில் ஈடுபடுவது குழந்தை தொடர்பான பணிகளில் இருந்து உங்களை விடுவித்து, மேலும் நிறைவாக உணர உதவும். பின்னல், ஓவியம் அல்லது இசை வாசித்தல் என நீங்கள் விரும்பும் ஒன்றைச் செய்ய நேரம் ஒதுக்குங்கள். தியானம் அல்லது யோகா போன்ற நினைவாற்றல் நுட்பங்கள் மன அழுத்தத்தைக் குறைக்க உதவும்.

மிக முக்கியமாக, ஒரு புதிய அம்மாவாக, நீங்களே கருணை காட்டுவது முக்கியம். நீங்கள் உங்களால் முடிந்ததைச் செய்கிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்களுக்குத் தேவைப்படும்போது உதவி கேட்கலாம், மேலும் நடவடிக்கை எடுக்கத் தயங்காதீர்கள். தினமும் இந்த பழக்கங்களைப் பின பற்றி வந்தால்,ஒவ்வொரு அம்மாவும் சூப்பர் மம் தான்.

# கனடாவின் புதிய பிரதமர் யார்? இந்திய வம்சாவளி உள்பட 8 பேர் போட்டி!



கனடா பிரதமர் பதவியில் இருந்து ஜஸ்டின் ட்ரூடோ இராஜினாமா செய்வதாக நேற்று அறிவித்த நிலையில் கனடாவின் புதிய பிரதமர் பதவிக்கு இந்திய வம்சாவளியை சேர்ந்தவர் உள்பட 8 பேர் போட்டியிட உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

முன்னதாக ஜஸ்டின் ட்ரூடோ கனடாவின் பிரதமராக இருந்த காலப்பகுதியில் அவரது பொருளாதார நடவடிக்கைகளுக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. மேலும் சொந்த கட்சியிலேயே எதிர்ப்பை சந்தித்தார். பெரும்பாலான எம்.பி.க்கள் அவருக்கு எதிராக உள்ளனர். இதையடுத்து பதவி விலகுவதாக ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் கனடாவின் புதிய பிரதமராக யார் தேர்வு செய்யப்பட உள்ளார் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டு இருக்கிறது. முன்னாள் பாதுகாப்பு அமைச்சரும் தற்போதைய போக்குவரத்து மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சருமான இந்திய வம்சாவளியை சேர்ந்த அனிதா ஆனந்த் பெயர் பிரதமர் பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டு வருகின்றது . இவரது தந்தை ஆனந்த் தமிழ்நாட்டையும், தாய் சரோஜ் பஞ்சாப் மாநிலத்தையும் சேர்ந்தவர்கள். அனிதா ஆனந்த் 2019 முதல் 2021-ஆம் ஆண்டு வரை பொதுச்சேவைகள் மற்றும் கொள்முதல் அமைச்சராக இருந்தார். கொரோனா காலத்தில் கோவிட்-19 தொற்றுநோயின் மருத்துவ உபகரணங்களைப் பாது காப்பதற்கான ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகளில் பங்காற்றினார். அதேபோல் இந்திய வம்சாவளியை சேர்ந்த எம்.பி.யான ஜார்ஜ் சாகல், பிரதமர் பதவி போட்டியில் உள்ளார். இவர் இயற்கை வளங்களுக்கான நிலைக்குழுவின் தலைவராகவும், சீக்கிய காக்கசின் தலைவராகவும் உள்ளார்.

இதைத்தவிர சில நாட்களுக்கு முன்பு துணைப் பிரதமர் பதவியில் இருந்து விலகிய கிறிஸ்டியா பிரீலேண்ட், முன்னாள் வெளியுறவு அமைச்சர் மெலனி ஜோலி, மூத்த அமைச்சர் டொமினிக் லெப்லாங்க், முன்னாள் பேங்க் ஆப் கனடா மற்றும் பேங்க் ஆப் இங்கிலாந்து கவர்னர் மார்க் கார்னி மற்றும் பிராங்கோயிஸ்-பிலிப் ஷாம்பெயின், கிறிஸ்டி கிளார்க் ஆகியோரும் களத்தில் உள்ளனர். இருப்பினும் இப்போட்டியில் அனிதா ஆனந்தே முன்னணியில் உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.




## பிரிக்ஸ் அமைப்பில் இணைந்தது இந்தோனேசியா – பிரேசில் அறிவிப்பு!

*பிரிக்ஸ் அமைப்பின் உறுப்பினராக இந்தோனேசியா இணைந்ததாக பிரேசில் அறிவித்து இருக்கிறது.*

*தெற்கு ஆசியாவில் அதிக மக்கள் தொகை கொண்ட நாடுகளில் ஒன்றாக இந்தோனேசியா இருக்கிறது.*

*இது தொடர்பாக பிரேசில் வெளியுறவு துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், "தென் கிழக்கு ஆசியாவின் அதிக மக்கள்தொகை கொண்ட நாடு உலகளாவிய நிர்வாகத்தின் நிறுவனங்களை சீர்திருத்தும் விருப்பத்தை மற்ற உறுப்பு நாடுகளுடன் பகிர்ந்து கொள்கிறது. மேலும், உலகளாவிய தெற்கிற் குள் ஒத்துழைப்பை வழங்கவும் சாதகமாக பங்களிக்கிறது," என தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*2025 ஆம் ஆண்டு பிரிக்ஸ் அமைப்பின் தலைமை ஏற்றுள்ள பிரேசில், இந்தோனேசியாவை அமைப்பில் இணைப்பது தொடர்பான முயற்சிகள் கடந்த 2023 ஆம் ஆண்டு தொடக்கம் தொடங்கியதாக தெரிவித்தது.*

*2009 ஆம் ஆண்டு பிரேசில், ரஸ்யா, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளால் பிரிக்ஸ் அமைப்பு உருவாக்கப்பட்டது. இதற்கு அடுத்த ஆண்டு பிரிக்ஸ் அமைப்பில் தென் ஆபிரிக்கா இணைக்கப்பட்டது.*

*கடந்த ஆண்டு, பிரிக்ஸ் அமைப்பில் ஈரான், எகிப்து, எத்தியோப்பியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகள் முழு உறுப்பினர்களாக இணைந்தன.*

## அமெரிக்காவில் இதுதான் முதல் முறை பறவை காய்ச்சலால் ஒருவர் உயிரிழப்பு

அமெரிக்காவில் பறவை காய்ச்சல் பாதிப்பு காரணமாக ஒருவர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி இருக்கிறது. அந்நாட்டில் பறவை காய்ச்சலுக்கு ஒருவர் உயிரிழந்தது இதுவே முதல்முறை ஆகும்.

அமெரிக்காவின் லூசியானா மாகாணத்தை சேர்ந்த 65 வயது முதியவருக்கு சமீபத்தில் பறவை காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து, அவர் சிகிச்சைக்காக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். அதிக தொற்று தன்மை கொண்ட எச்5.என்1. ரக வைரஸ் மூலம் பாதிக்கப்பட்ட முதியவருக்கு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. எனினும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்து விட்டார். இதனை லூசியானா மாகாண சுகாதார துறை தெரிவித்து உள்ளது. காட்டு பறவைகள் மற்றும் வளர்ப்பு பறவைகள் ஆகியவற்றுடன் தொடர்பில் இருந்ததால் அவருக்கு தொற்று ஏற்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் தவிர, அமெரிக்காவில் வேறு யாருக்கும் இந்த தொற்று ஏற்படவில்லை என்று லூசியானா மாகாண சுகாதார துறை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. மேலும், அவரது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு ஆழ்ந்த இரங்கலும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

அமெரிக்காவில் முதன்முறையாக பறவை காய்ச்சல் பாதிப்புக்கு ஒருவர் உயிரிழந்திருப்பதாக லூசியானா மாகாண சுகாதார துறை தெரிவித்துள்ளது.

## திபெத்தில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் 50 ஐ கடந்த உயிரிழப்பு!



சீனாவின் திபெத் பகுதியில் இன்று (07) காலை ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் குறைந்தது 53 பேர் உயிரிழந்துள்ளதாக சீன அரசு ஊடகம் தெரிவித்துள்ளது.

திபெத்தில் உள்ள நகரமான ஷிகாட்சேயில் உள்ளூர் நேரப்படி காலை 9:00 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

7.1 ரிக்டர் அளவில் மேற்பரப்புக்கு கீழே 10 கிலோமீட்டர் (சுமார் ஆறு மைல்) ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

மேலும், அமெரிக்க புவியியல் ஆய்வின் தரவுகளின்படி, பெரிய நிலநடுக்கத்திற்கு பிறகு சிறிய நிலநடுக்கங்களும் ஏற்பட்டுள்ளதோடு, அண்டை நாடான நேபாளம் மற்றும் இந்தியாவின் சில பகுதிகளிலும் நிலநடுக்க அதிர்வுகள் உணரப்பட்டுள்ளது.

முன்னதாக 2015ஆம் ஆண்டில், நேபாளத்தின் தலைநகரான காத்மாண்டு அருகே 7.8 ரிக்டர் அளவில் பேரழிவை ஏற்படுத்திய நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டது.

இதில் கிட்டத்தட்ட 9,000 மக்கள் இறந்ததுடன், 20,000 க்கும் அதிகமான மக்கள் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஆய்வு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அம்சமாக ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கு முக்கியத்துவம் கொடுப்பதற் கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

உயர்நிலைத் தீர்வுகளுக்கான அவசரத் தேவையை உணர்ந்து, பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும், மனித மற்றும் சமூக வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கும், ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் ஊடாக உற்பத்தி செய்யப்படும் பெறுமதி சேர் பொருட்கள் மற்றும் சேவைகளை வணிகமயமாக்குவதற்கு ஒரு பிரத்தியேக பொறிமுறை அவசியம் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில், ஆய்வு மற்றும் அபிவிருத்தி வணிகமயமாக்கலுக்கான தேசிய செயற்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த பொறிமுறையின் பங்காளர்களாக உள்ள அமைச்சுக்கள், பல்கலைக்கழகங்கள், ஆய்வு நிறுவனங்கள், முதலீட்டாளர்கள், தொழில் முனைவோர், நிதியுதவி நிறுவனங்கள் மற்றும் பிற தொடர்புடைய நிறுவனங்களுக்கு தேசிய வளர்ச்சி முன்னுரிமைகளுடன் இணைந்த ஆராய்ச்சியை மேற்கொள்ள அதிகாரம் அளிக்கப்படவுள்ளது.

அறிவியல், தொழில், பொருளாதாரம், சட்டம், கலை மற்றும் கலாச்சாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிபுணர்களைக் கொண்ட உயர்மட்டக் குழுவால் இந்த முயற்சி வழிநடத்தப்படும். இந்த முயற்சியை ஒருங்கிணைக்க ஜனாதிபதி செயலகத்தின் கீழ் பிரத்தியேக செயலகம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது, முதற்கட்டமாக அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் ஒத்துழைப்புடன். அதன் செயல்பாடுகளில் பொருத்தமான ஆய்வு மற்றும் அபிவிருத்தித் திட்டங்களைக் கண்டறிந்து சரிபார்த்தல், அரசாங்க இடைவெளியை நிரப்பும் நிதியை ஒதுக்கீடு செய்தல், தனியார் முதலீட்டாளர்களை இணைத்தல் மற்றும் அறிவியல் அறிவைப் பரப்புவதற்கான திட்டங்களை செயல்படுத்துதல் ஆகிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (ஜ-09)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"வடக்கில் சிறு பிரச்சினை இருப்பதாக உணரமுடிகின்றது. அங்குள்ள மக்களுக்கு வரப்பிரசாதங்கள் வழங்கப்பட வேண்டும். இந்த நிலைப்பாட்டிலேயே நான் இருக்கின்றேன்.

13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள பொலிஸ், காணி அதிகாரங்களைத் தவிர ஏனையவற்றை வழங்கவும்.

இலங்கை என்பது சுயாதீன நாடு. நாம் இந்தியாவின் கைப்பாவையாகவும் மாறக்கூடாது. வெளிநாட்டுத் தொடர்புகள் அவசியம். அதனை எமது நாட்டுக்கு நன்மை பயக்கக் கூடியதாக மாற்ற வேண்டும்.

வெளிநாட்டுத் தூதரக சேவைகளில் உள்ளவர்கள் மாற்றப்பட வேண்டும். சிறப்பாக வேலை செய்யக்கூடியவர்களை நியமிக்க வேண்டும்." - என்றார்.

## ரணில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"இரு தரப்பும் இணைந்து செயற்பட வேண்டும் எனக் கட்சி ஆதரவாளர்கள் கோருகின்றனர். ஐக்கிய மக்கள் சக்தி தற்போது கூட்டணியாகவே செயற்படுகின்றது. எனவே, இந்த இணைவு பற்றியும் ஆராயப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சக்திக்கு 45 எம்.பிக்கள் உள்ளனர். மாற்றுக் கட்சிகளுக்குச் செல்ல வேண்டிய தேவைப்பாடு எமக்குக் கிடையாது. எனவே, கூட்டணி பற்றியே கவனம் செலுத்தப்பட்டுள்ளது." - என்றார்.

# வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களுக்கு இ-சேவை



கொழும்பு, ஜன 07

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் மூலம் பிறப்பு, திருமணம் மற்றும் இறப்புச் சான்றிதழ்களின் ஆன்லைன் சான்றளிக்கப்பட்ட நகல்களைப் பெறுவதற்கு வெளிநாட்டு இலங்கையர்களுக்கு உதவும் நோக்கில் ஒரு முன்னோடித் திட்டத்தை அரசாங்கம் தொடங்கியுள்ளது.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு, பதிவாளர் நாயகம் திணைக்களத்துடன் இணைந்து இத்திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

புதிய அமைப்பு இலங்கையின் பதிவாளர் நாயகம் திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் இ-பிஎம்டி (மின்னணு பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு சான்றிதழ்) தரவுத்தளத்திற்கான இலங்கையின் இராஜதந்திர பணிகளுக்கு அணுகலை வழங்குகிறது.

ஆரம்ப வைபவம் செவ்வாய்க்கிழமை மெய்நிகராக நடைபெற்றது. வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திர, அமைச்சின் செயலாளர் அருணி ரணராஜா, பதிவாளர் நாயகம் டபிள்யூ.ஆர்.ஏ.என்.எஸ். விஜயசிங்க மற்றும் ஜனாதிபதி செயலகம், பதிவாளர் நாயகம் திணைக்களம் மற்றும் அமைச்சின் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

முதற்கட்டமாக, டோக்கியோ (ஜப்பான்), குவைத், தோஹா (கத்தார்), மிலன் (இத்தாலி), டொராண்டோ (கனடா), மெல்போர்ன் (ஆஸ்திரேலியா) மற்றும் துபாய் ஆகிய நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் மற்றும் துணைத் தூதரகங்கள் மூலம் இந்த முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்படும். அமைச்சும் பதிவாளர் நாயகம் திணைக்களமும் இலங்கை புலம்பெயர்ந்தோருக்கு மிகவும் திறமையான தூதரக சேவைகளை உறுதிப்படுத்தும் வகையில், உலகெங்கிலும் உள்ள ஏனைய இலங்கை தூதரகங்களுக்கும் சேவையை அவ்வப்போது விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளன.

பல்வேறு உத்தியோகபூர்வ நோக்கங்களுக்காக பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட நகல்கள் தேவைப்படுகின்றன. இந்த புதிய முறையானது வெளிநாட்டு இலங்கையர்களுக்கு இந்த ஆவணங்களை நேரடியாக வெளிநாட்டில் உள்ள தங்களின் தூதரகங்களில் இருந்து பெற்றுக் கொள்ள அனுமதிக்கிறது. இலங்கையில் உள்ள அவர்களின் பிரதிநிதிகள் அவர்கள் சார்பாக பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திலிருந்து ஆவணங்களைக் கோருவதற்கான தேவையை நீக்குகிறது.

விண்ணப்பித்தவுடன், அங்கீகரிக்கப்பட்ட இலங்கைத் தூதரகங்கள் ந-டீஆனு தரவுத்தளத்திலிருந்து தேவையான சான்றிதழ்களை மீட்டெடுப்பதன் மூலம் சான்றளிக்கப்பட்ட நகல்களை வழங்கும்.

இந்தத் திட்டம் இலங்கையின் டிஜிட்டல் மயமாக்கல் முயற்சிகளில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல் என்று மெய்நிகர் அறிமுகத்தைத் தொடர்ந்து அமைச்சர் ஹேரத் கூறினார்.

இவ்வாறான முன்முயற்சிகள் வெளிநாடுகளில் உள்ள இலங்கை சமூகத்தினருக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று கூறிய அவர், இரண்டு மாதங்களில் வடிவமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த திட்டம், பொதுச் சேவைகளை டிஜிட்டல் மயமாக்குவதற்கான அரசாங்கத்தின் வலுவான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது என்று குறிப்பிட்டார்.

முன்னோடித் திட்டம் செயலில் உள்ள நாடுகளில் உள்ள இலங்கை வெளிநாட்டவர்கள் இப்போது பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களுக்கு அந்தந்த பணிகள் மற்றும் பதவிகளில் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பித்து விண்ணப்பிக்கலாம். (ஜ)

## ஜனவரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்படி, இந்தியாவிலிருந்து 6 ஆயிரத்து 183 சுற்றுலாப் பயணிகளும், ஐக்கிய இராச்சியத்திலிருந்து 2 ஆயிரத்து 928 சுற்றுலாப் பயணிகளும், ஜேர்மனியிலிருந்து 2 ஆயிரத்து 921 சுற்றுலாப் பயணிகளும், ஆஸ்திரேலியாவிலிருந்து 1,708 சுற்றுலாப் பயணிகளும், அமெரிக்காவிலிருந்து 1,605 சுற்றுலாப் பயணிகளும், போலந்திலிருந்து 1,539 சுற்றுலாப் பயணிகளும், பிரான்ஸிலிருந்து 1,228 சுற்றுலாப் பயணிகளும், சீனாவிலிருந்து 1,196 சுற்றுலாப் பயணிகளும், நெதர்லாந்திலிருந்து 1,163 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.

## ஈஸ்டர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடைக்கான கேள்வி நேரத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கைதாகியுள்ளவர்களில் 100 பேருக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் 41 வழக்குகளும், உயர்நீதிமன்றத்தில் 14 வழக்குகளும் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இதனிடையே உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் மேலும் கூறினார்.

## மேலே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எம்.பி., இது தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர், சபாநாயகர் உள்ளிட்ட தரப்பு கலந்துரையாடி இருப்பதாகவும், இந்த விடயத்தில் சபாநாயகரின் அறிவுறுத்தலுக்காகக் காத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

## புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டுள்ளது. இதன்படி, கட்டாருக்கான தூதுவராக ஆர்.எஸ்.கான் அஷாத்தும், ரஷ்யாவுக்கான தூதுவராக எஸ்.கே.குணசேகரவும், குவைத்துக்கான தூதுவராக எல்.பி.ரத்நாயக்கவும், எகிப்துக்கான தூதுவராக ஏ.எஸ்.கே.செனவிரத்னவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், நியூசிலாந்துக்கான உயர்ஸ்தானிகராக டபிள்யூ.ஜீ.எஸ். பிரசன்ன நியமிக்கப்பட்டுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

# வவுனியாவில் 113 பேருக்கு டெங்கு நோய்

வவுனியா மாவட்டத்தில் கடந்த 2024 ஆம் ஆண்டு 113 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது.

வவுனியா மாவட்டத்தில் மழைக் காலங்களில் மழை நீரானது டெங்கு நுளம்பு பெருக்கும் வகையில் தேங்கி நிற்காமல் இருப்பதற்காகச் சுகாதார பரிசோதகர், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருந்தனர்.

எனினும், 2024 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரை 113 பேர் வவுனியாவில் டெங்கு நோயினால் பாதிப்படைந்துள்ளனர்.

அதில் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 82 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மேலும் தெரிவித்துள்ளது.

# பார்வை பாதித்த 17 பேருக்கு நஷ்டஈடு



கொழும்பு, ஜன 07

நுவரெலியா வைத்தியசாலையில் தரமற்ற மருந்து பயன்பாட்டினால் கண் பார்வை பாதிப்புக்குள்ளான 17 பேருக்கு நஷ்டஈடு வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக சுகாதாரம் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தின் போது எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

மருந்து விநியோக கட்டமைப்பை வினைத்திறனாக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தேசிய மருந்தக ஆராய்ச்சியகம் தொடர்பில் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. மருந்து விநியோகம் தொடர்பில் கிடப்பில் இருந்த 2100 கோப்புக்களில் 1200 கோப்புக்கள் தொடர்பிலான விசாரணைகள் நிறைவு பெற்றுள்ளன

12 நோயாளர்களுக்கு 1,000,000 ரூபாய் வீதம் இழப்பீடு செலுத்தல், 02 நோயாளர்களுக்கு 750,000 ரூபாயட வீதம் இழப்பீடு செலுத்தல்

ஒரு நோயாளிக்கு 700,000 ரூபாய் இழப்பீடு செலுத்தல் மற்றும் 02 நோயாளர்களுக்கு 250,000 ரூபாய் வீதம் இழப்பீடு செலுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஜ)







இந்நாளிதழ் நல்லூர், இல - 68. Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.01.2025 இல் வெளியிடப்பெற்றது.